வாக்குமூலம்

## திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

வழக்கு எண். C.C.268/2021

வழக்கு சாட்சி- **அ.சா.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ராதிகா | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அருட்செல்வன் | : | தொழில் | வீட்டுக் குடித்தனம் |
| கிராமம் | அன்பில் | : | சமயம் | |
| தாலுக்கா | லால்குடி | : | வயது | 45/2024 |

(எதிரி ஆஜர்.)

**நாள் : 26.06.2024**

**முதல் விசாரணை** :

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகின்றேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 07.08.2021ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் பிரசன்னா என்பவர் அவரது வீட்டில் இருந்து கிளம்பி நாகாச்சி பாலம் அருகே Hero Honda இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டு இருந்தார். ஆஜர் எதிரி அன்றைய தினம் டாடா ஏசி வாசனத்தை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி ஓட்டிக் கொண்டு செல்லும்போது, மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த பிரச்சன்னா ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். மேற்படி விபத்து குறித்து சதீஷ் என்பவர் தகவல் சொன்னார். பின்னர் காயம்பட்ட பிரசன்னாவை திருக்காட்டுப் பள்ளி அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்ற பின்னர் மேல் சிகிச்சைக்காக FRONTLINE மருத்துவமனையில்

சேர்த்தார்கள். 4 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி பிரச்சன்னா இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பபில் குறுக்கு விசாரணை : இல்லை.**